**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் விகாரி வருடம் தமிழ் மாதம் வைகாசி 16–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 மே 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் : 1773 /2017 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு செந்தமான ஈப்பு வாகனத்திற்கு மாதாந்திர மற்றும் காலமுறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்யுள்ளது. மேலும், குடிநீர் பணிகள், வருவாய் பணிகள் மற்றும் திட்டப்பணிகள் ஆய்வு மற்றும் உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் கலந்தாய்வு போன்ற பணிகள் தடையின்றி நடைபெற ஈப்பு வாகனம் பராமரிப்பு பணிகள் அவசியமாக உள்ளது. எனவே, பராமரிப்பு பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான CAI Mahindra நிறுவனத்தில் உடனுக்குடன் மேற்கொள்ளவும், வாகனத்திற்கு செலுத்த வேண்டிய காப்புத்தொகையை யுனைடெட் இண்டியா நிறுவனத்தில் செலுத்தவும் ஒரு ஆண்டிற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1591 . நாள்.29.05.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**ந.க.எண்.577/2020/எச்1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புறநகர் பேருந்து நிலையம், நகர பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட் மற்றும் இந்நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிப்பிடங்கள் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான ஒன்பது எண்ணிக்கையிலான கட்டண மற்றும் பொது கழிப்பிடத்தில் பெண்களுக்கு தனியாக அமைக்கப்பட்டுள்ள கழிப்பறையில் நாப்கின்கள் பயன்படுத்துவதை எரியூட்டும் இயந்திரம் (Ininerator) கொண்டு எரியூட்டு செய்யப்பட்டு கழிப்பிடத்தை சுகாதாரமான முறையில் பயன்படுத்திட மேற்குறிப்பிட்ட கழிப்பிடங்களில் **நாப்கின் எரியூட்டும் இயந்திரம் (Ininerator)** பத்து எண்ணிக்கையில் புதிதாக வாங்கிடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி இயந்திரத்தை வாங்கி பயன்படுத்திடவும், இதற்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1592 . நாள்.29.05.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

ந.க.எண்.577/2020எச்1

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் கொரேனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள் , தொழிற்சாலை பகுதிகள், பேருந்து நிலையம், தினசரி மார்கெட், வாரச்சந்தை, அரசு அலுவலகங்கள், அரசு குடியிருப்புகள் அரசு மருத்துவமனை, மற்றும் தனியார் மருத்துவமனை அரசு மேல் நிலைப்பள்ளி துவக்கப்பள்ளிகள் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி, மாணவியர் விடுதி, கோவில்கள் வழிபாட்டு தளங்கள், மசூதிகள், தேவாலயங்கள், அம்மா உணவகம், மின்மயானப்பகுதி பேருந்து நிறுத்தும் இடங்கள், காங்கயம் பேருந்து பணிமனை, வெளிநாடுகளில் இருந்து வந்து இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களின் குடியிருப்புகள், வெளிமாநிலங்களுக்கும் டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிற்கு சென்று வந்தவர்கள், அவர்களின் குடியிருப்புகள் நகராட்சியில் தூய்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனங்கள் அலுவலக வாகனங்கள் வெளியூரில் இருந்து இந்நகராட்சி எல்லைக்குள் வரும் வாகனங்கள் ஆகிய மேற்காணும் அனைத்து பகுதிகளும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சி டிரேக்டர் எண்.TN33AZ0014- இல் பவர் ஸ்பிரேயர் கருவி பொருத்தி கிருமிநாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ள மேற்படி டிரேக்டர் வாகனத்திற்கு மினி டிரெய்லர், 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க், பவர் ஸ்பிரேயர் மற்றும் பி.வி.சி பைப் 100 மீட்டர் அளவில் ஆகியவை புதியதாக வாங்கிட விலைப்புள்ளி கோரிடவும், விநியோக உத்தரவு வழங்கி, பணி முடிக்கப்பட்டு பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் தொகை வழங்கிடவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1593 . நாள்.29.05.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**ந.க எண் 580/2020/எச்1**

காங்கயம் நகராட்சி பகுதியில் வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் தினசரிதூய்மைப் பணியாளர்களைக் கொண்டு வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து சேகரித்தல் , சாக்கடை கழிவுகள் சத்தம் செய்தல், சாலை ஓரங்கள் கழிவுநீர் கால்வாய் மீது வளர்ந்துள்ள தேவையற்ற புல் செடிகளை வெட்டி அப்புறப்படுத்துதல், பேருந்து நிலையம் மற்றும் முக்கிய சாலைகள் தினசரி மார்க்கெட் பகுதி வார சந்தை கூட்டுதல் ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பைகளை நகராட்சி வாகனங்கள் மூலம் தூய்மை பணியாளர்களைக் கொண்டு அப்புறப்படுத்துதல், நகராட்சி சமுதாய கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் ஆகிய சுகாதார பணியினை மேற்கொள்ள தூய்மை பணியாளர்களுக்கு 2020–2021 ம் ஆண்டிற்கு தேவையான மண்வெட்டி, சவுள், அரிவள், சாக்கடை சுத்தம் செய்யும் சுரண்டி சிறியது மற்றும் பெரியது, தெருக்கள் கூட்டும் சீமாறு, சாலை ஓரங்களில் உள்ள மண் சுத்தம் செய்யும் பிரஸ், குப்பைகளை கூட்டி அப்புறப்படுத்திட்ட தேவையான கூடைகள் மற்றும் இதர தளவாட பொருட்கள் வாங்கிட உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூய்மைப் பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் வாங்கிடவும், பொது நிதியில் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண்.1594 . நாள்.29.05.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**ந.க. எண்.0581/2020/எப்1**

நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயம் ஏற்படுத்தப்பட வேண்டும் என 1920 ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 215 A மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் விதி 63(1) ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவது தமிழக அரசின் முக்கியமான திட்டங்களில் ஒன்றாக உள்ளதால் காங்கயம் நகராட்சியில் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் கட்டிட விண்ணப்பங்களுடன் கீழ்க்கண்டவாறு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பிற்கான வைப்புத் தொகை வசூலிக்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **உபயோகம்** | **உத்தேச கட்டிடத்தின் மொத்த பரப்பளவில் ஒரு சதுர மீட்டருக்கு (ரூபாயில்)** |
|---|---|---|
| 1 | அனைத்து உபயோக கட்டிட விண்ணப்பங்களுக்கும் | ரூ.25/– |

மேற்கண்டவாறு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பிற்கான வைப்புத்தொகை வசூல் செய்யவும், கட்டிடதாரர் மேற்கண்ட விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை முறையாக அமைத்த பிறகு மேற்படி வைப்புத் தொகையை கட்டிடதாரர் திரும்ப வழங்கக் கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஆய்வு செய்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு முறையாக அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னர் மேற்படி வைப்புத் தொகையை மனுதாருக்கு திரும்ப வழங்கவும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மேற்கண்டவாறு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பிற்கான வைப்புத் தொகை வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. விதிகளின் படி முறையாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்ட பின் மனுதாரர் வைப்புத் தொகையை திரும்ப வழங்க விண்ணப்பிக்கும் பட்சத்தில் வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1595 . நாள்.29.05.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்புஎண்.2072/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான திருப்பூர் ரோடு நுழைவு வாயில் கடைகள் 1 முதல் 4 வரை மற்றும் தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் 16 மற்றும் 25 ஆகிய கடைகளின் குத்தகை காலம் 31.05.2020 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட கடைகளுக்கு நடப்பு குத்தகை தொகையுடன் 15% உயர்வு செய்து குத்தகை காலத்தை 01.06.2020 முதல் 31.05.2023 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பெயர் | குத்தகை இனம் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | செந்தில்குமார் –கடை எண்–1 | திருப்பூர் ரோடு நுழைவு வாயில் கடைகள் | 01.06.2020 முதல் 31.05.2023 வரை | ரூ.6500/– | ரூ.975/– | ரூ.7475/– |
| 2. | ராக்கியப்பன்– கடை எண்–2 | | | | | |
| 3. | செல்லமாள்–கடைஎண்–3 | | | | | |
| 4. | கவிதா –கடை எண்–4 | | | ரூ.6600/– | ரூ.990/– | ரூ.7590/ – |
| 5. | லதா– கடை எண்–16 | தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை | | ரூ.8100/– | ரூ.1215/– | ரூ.9315/– |
| 6. | நாகராஜன்– கடை எண்–25 | | | ரூ.8000/– | ரூ.1200/– | ரூ.9200/ – |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மொத்தம் 6 கடைகளின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 15% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் கடை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1596 . நாள்.29.05.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திரு.பு.பொன்னம்பலம்
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி